# 2 இணைத் திருமுறை நூல்கள்

**திருவிவிலிய நூல்களின் எண்ணிக்கை**

| | பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு | மொத்தம் |
|---|---|---|---|
| யூத விவிலியம் | 39 | - | 39 |
| கிறிஸ்தவ விவிலியம் | 39 | 27 | 66 |
| கத்தோலிக்க திருவிவிலியம் | 46 | 27 | 73 |

கத்தோலிக்க திருவிவிலியத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 73 நூல்கள் பட்டியல் என்பது இறை ஏவுதலால் எழுதப்பட்டவையாகும். பழைய ஏற்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்களின் எண்ணிக்கை தொடர்பான பிரச்சினை காணப்படுகின்றது.

யூதர்களும் கத்தோலிக்கம் அல்லாத கிறிஸ்தவ சபையினரும் பழைய ஏற்பாட்டு நூல்களாக 39 நூல்களை மட்டுமே ஏற்றுக்கொண்டுள்ளனர். கத்தோலிக்கர் ஏற்றுக் கொண்ட பழைய ஏற்பாட்டு நூல்களின் எண்ணிக்கை 46 ஆகும். கிரேக்க மொழிபெயர்ப்பாகிய செப்துவாஜிந் பிரதி மூலமாகவே இந்த 46 நூல்களும் பெறப்பட்டன. யூதர்கள் மத்தியில் இருந்தே இப்பிரதிகள் தோன்றின. இங்கு யூதர்களும் கிறிஸ்தவர்களும் பயன்படுத்தியது எபிரேய பிரதியாகும். இது மசோரோடிக் பிரதி எனவும் அழைக்கப்படுகிறது.

இதன்படி கத்தோலிக்க திருவிவிலியத்தில் மேலதிகமாக 7 நூல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை இணைத் திருமுறை நூல்கள் என அழைக்கப்படுகின்றன. அவை தோபித்து, யூதித்து, சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம், பாரூக், மக்கபேயர் முதல் நூல், மக்கபேயர் 2ம் நூல் என்பவையாகும்.

திருமுறை நூல்களுக்கு இணையானவை என்ற வகையில் இரண்டாவதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்களே இவையாகும். ஆயினும் இவை மசோரோடிக் பிரதிகள் தயாராவதற்கு முன்பே செப்துவாஜிந் பிரதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல்கள், இணைத்திருமுறை நூல்கள் என வேறுப ாடு காணப்படவில்லை.

## செப்துவாஜிந் பிரதி

எபிரேய மொழியில் எழுதப்பட்ட பழைய ஏற்பாடு கி.மு 3ஆம் நூற்றாண்டில் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. நிமிதிரியஸ் என்னும் 2ஆம் தொலமி அரசன் 12 கோத்திரங்களிலும் இருந்து 6பேர் வீதம் 72 சட்டவல்லுனர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களிடம் மொழி பெயர்ப்புப் பணியை ஒப்படைத்தார். அவ்வாறு செய்யப்பட்ட மொழிபெயர்ப்பே செப்துவாஜிந் (LXX எழுபது) என அழைக்கப்படுகின்றது. அவர்கள் அதனைத் தனித்தனியே செய்த போதிலும் அம்மொழி பெயர்ப்புகள் 72ம் ஒரே விதமாக இருந்ததாக கூறப்படுகின்றது. செப்துவாஜிந் பிரதியிலுள்ள 46 நூல்களையுமே கத்தோலிக்க திருச்சபை பழைய ஏற்பாடாக ஏற்றுப் பயன்படுத்துகின்றது.

## இணைத்திருமுறை நூல்கள் இறை ஏவுதலால் எழுதப்பட்டன என்பதற்கான சான்றுகள்

1. புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் தங்கள் நூல்களை எழுதிய போது கிரேக்கப் பிரதிகளைப் பயன்படுத்தினர். அவர்கள் பயன்படுத்திய 350 மேற்கோள்களில் 300 மேற்கோள்களை கிரேக்கப் பிரதியிலிருந்தே தெரிந்தெடுத்தனர். இவற்றில் 18 மேற்கோள்கள் இணைத்திருமுறை நூல்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன. இணைத்திருமுறை நூல்களில் இறை ஏவுதல் பற்றிய சிக்கல் இருந்திருப்பின் அவ்வாறு பயன்படுத்தி இருக்கமாட்டார்கள்.

2. கிரேக்கப் பிரதியின் தொகுப்பும், இணைத்திருமுறையின் நூல்களும் வேறுபடுத்திக் காட்டப்படவில்லை. உதாரணமாக நெகேமியா நூலுக்குப் பின் தோபித்து மற்றும் யூதித்து என்னும் இணைத்திருமுறை நூல்கள் இணைக்கப்பட்டுள்ளதோடு அதற்கடுத்து எஸ்தர் நூல்இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் எபிரேய பிரதியில் உள்ள நூல்களும், கிரேக்கப் பிரதியில் உள்ள நூல்களும் ஒரே நிலையைப் பெற்றிருப்பதை அவதானிக்க முடியும்.

3. ஆதிக்கிறிஸ்தவ சமூகத்தில் இணைத்திருமுறை நூல்கள் திருவழிபாட்டில் உபயோகிக்கப்பட்டது என்பதற்கு சான்றுகள் உண்டு.

மேற்கூறப்பட்ட விடயங்களில் இருந்து கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் இணைத்திருமுறை நூல்கள் இறை ஏவுதல் பெற்ற இறை வார்த்தைகளாகக் கருதப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்துள்ளன என்பது தெளிவாகின்றது. எனவே கத்தோலிக்கராகிய நாம் இணைத்திருமுறை நூல்களில் உள்ளவற்றை இறைவார்த்தைகளாக ஏற்று எமது வாழ்வை ஒளிமயமாக்க முயற்சிக்க வேண்டும். எம் அன்றாட வாழ்வில் இவ் இறைவார்த்தைகளைப் பயன்படுத்துவது எமக்கு சிறந்த வழிகாட்டியாக அமையும்.

**செயற்பாடு**

1. இணைத்திருமுறை நூல்கள் ஏழையும் பெயரிடுக.
2. செப்துவாஜிந் பிரதி கத்தோலிக்கராகிய எமக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுவதற்கான காரணங்கள் மூன்று தருக.

**வாழ்க்கைக்கு**

✝ இணைத்திருமுறை நூல்களை இறைவார்த்தையாக ஏற்றுக் கொள்வோம்.

✝ இணைத் திருமுறை நூல்களை அன்றாட வாழ்வில் பயன்படுத்துவோம்.